பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**30 09 2026 WEDNESDAY 6.30 PM**

மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

**1)** நடப்புப் பருவ பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**2)** விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க, அமைச்சரவையின் இந்த முடிவு உதவிடும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

**3)** தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு விஜய் தெரிவித்துள்ளார்.

**4)** தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று திமுக-வும், அஇஅதிமுக-வும் மீண்டும் குற்றம் சாட்டியுள்ளன.

**5)** ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் சுனில்குமார் வெண்கலப்பதக்கம் வென்றார்.

-- இனி விரிவான செய்திகள்---

<<<<<<>>>>>

நடப்பு பருவ பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், இதன்படி, கோதுமைக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு 25 ரூபாய் உயர்த்தப்படுவதாக கூறினார்.

பார்லிக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு 136 ரூபாயும், கடலைப்பருப்புக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு 83 ரூபாயும், மசூர் பருப்புக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு 390 ரூபாயும் உயர்த்துவதற்கு இந்த கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

கடுகுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு 413 ரூபாய் உயர்த்தவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

மத்திய அமைச்சரவையின் இந்த முடிவு வரவேற்கத்தக்கது என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கவும், அவர்களின் பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்யவும் இது உதவிடும் என்று கூறியுள்ளார்.

விவசாயிகள் நலன்களை பாதுகாப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

போதைப்பொருள் புழக்கத்தை ஒழிக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், கடலோர காவல்படையும், குஜராத் சிறப்புப் படையினரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது 526 கிலோ போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மும்பைக்கு தென்மேற்கு கடல் பகுதியில் இந்த போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும், இதுதொடர்பாக பாகிஸ்தானை சேர்ந்த

ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

தேர்தல் வாக்குறுதிகளை தவெக அரசு படிப்படியாக நிறைவேற்றி வருவதாக முதலமைச்சர் திரு விஜய் கூறியுள்ளார்.

தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலையொட்டி அத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

தவெக அரசு பொறுப்பேற்ற 100 நாட்களில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

மக்கள் நலனில் மட்டுமே அக்கறை கொண்டு தமது அரசு செயல்படுவதாகவும் அவர் கூறினார்.

திமுக-வும், அஇஅதிமுக-வும் ரகசிய கூட்டணி வைத்துள்ளதாகவும் திரு விஜய் குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவலிலை என்று திமுக மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் நேற்று ஒரே நாளில் 8 கொலை சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக கூறியுள்ளது.

தவெக அரசு பொறுப்பேற்ற பின்னர் தென்மாவட்டங்களில் மட்டும் 141 கொலைகள் நடைபெற்றுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றச்செயல்களை தடுக்க உறுதியான நடவடிக்கைகளை தவெக அரசு மேற்கொள்ளவில்லை என்றும் திமுக அந்த அறிக்கையில் குறை கூறியுள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்தில் குற்றச்சம்பவங்கள் அதிகரித்து வருவதாக அஇஅதிமுக குறை கூறியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒரே நாளில் எட்டு கொலை சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக கூறியுள்ளது.

சட்டம் — ஒழுங்கை பராமரிக்க உறுதியான நடவடிக்கைகளை தவெக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் அஇஅதிமுக அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

<<<<<<>>>>>

மதுரை, நாகர்கோவில் பாதாள சாக்கடைத் திட்டத்தை தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவினை தவெக அரசு கைவிட வேண்டும் என்று இடதுசாரி கட்சிகள் மற்றும் அமமுக வலியுறுத்தியுள்ளன.

இதுதொடர்பாக, இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டிருப்பது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே கோரிக்கையை வலியுறுத்தியுள்ள அமமுக, மக்கள் நலனை கருத்தில்கொள்ளாமல் பாதாள சாக்கடைத் திட்டத்தை தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவினை தவெக அரசு கைவிட வேண்டும் என்று கோரியுள்ளது.

<<<<<<>>>>>

புதிய சமையல் எரிவாயு இணைப்புகளை வழங்க எண்ணெய் நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மேற்காசிய சூழல் காரணமாக புதிய சமையல் எரிவாயு இணைப்பு வழங்க தடை விதிக்கப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும், சமையல் எரிவாயு இணைப்பு கோருபவர்களுக்கு அதிக விலையில் தற்காலிகமாக பத்து கிலோ எடை கொண்ட இரண்டு சிலிண்டர்களை வழங்குவதாக கூறியுள்ளார்.

இந்த கட்டண உயர்வு ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த **24** மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 24 Sec. )***

<<<<<<>>>>>

நாமக்கல் புத்தகத் திருவிழாவில் குழந்தைகள் தொடர்பான புத்தகங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதாக அதற்கான ஒருங்கிணைப்பாளர் திரு நாகராஜன் கூறியுள்ளார்.

இன்று நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த புத்தக திருவிழா நாளை தொடங்கி வரும் **18**-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக தெரிவித்தார்.

***(Sound Byte — நாகராஜன் - 44 Sec. )***

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

மயிலாடுதுறை மாவட்டத்தில் தீபாவளி பண்டிகையையொட்டி, கோ ஆப் டெஸ்க் விற்பனை நிலையத்தில் ஒரு கோடி ரூபாய் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு ஸ்ரீகாந்த் கூறியுள்ளார்.

----------------

மதுரை மாவட்டத்தில் விவாசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் திரு நிஷாந்த் கிருஷ்ணா தலைமையில் இன்று நடைபெற்றது.

----------------

அரியலூரில் கர்ப்பிணிகளுக்கான சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி ஆட்சியர் திருமதி மிருணாளினி தலைமையில் இன்று நடைபெற்றது.

----------------

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்கும் பொருட்டு, ஆட்சியர் திரு பிரதாப், கோணம் சிட்கோ தொழிற்பேட்டை மற்றும் ராணித்தோட்டம் அரசு போக்குவரத்துக்கழகத்தில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-----------------

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை சார்பில், பெண்கள்

பாதுகாப்பு மற்றும் இணையவழி குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

---------------------

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று பிற்பகல் நிலவரப்படி வினாடிக்கு 8 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் சுனில்குமார் வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஜப்பானில் நடைபெற்றுவரும் இப்போட்டிகளின் ஆடவர் மல்யுத்த 87 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

மகளிர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 2-0 என்ற கோல் கணக்கில், தென்கொரியாவை வென்றது.

ஸ்குவாஷ் போட்டிகளில் இந்தியா ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இப்போட்டிகளில், இந்தியா இதுவரை **10** தங்கம், **21** வெள்ளி, **29** வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் **7**-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

---------------

ஆஸ்திரேலியா ''ஏ'' அணிக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் இந்தியா ''ஏ'' அணி முதல் இன்னிங்சில் **5** விக்கெட் இழப்பிற்கு **122** ரன் எடுத்துள்ளது.

புதுச்சேரியில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் ஆஸ்திரேலியா ஏ அணி முதல் இன்னிங்சில் **358** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**<<<<<<END>>>>>**